OS.No. 361/2023 – 25.3.2025

PW1 – மாசிலாமணி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் நூல் வியாபாரம் வருகிறேன். எனக்கு மாத வருமானம் என்ன என்றால் மாதம் ரூ.3,00,000/–க்கு மேல் இருக்கும். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் ஆம், 30 வருடமாக செலுத்தி வருகிறேன். நான் பைனான்ஸ் தொழிலும் செய்து வருகிறேன் என்றால் சரி. பைனான்ஸ் செய்து வருவதை நான் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை, அவ்வப்போது யாராவது கடன் கேட்டால் கொடுப்பேன்.

பிரதிவாதியை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நேரடியாக அவரைத் தெரியும். பிரதிவாதி என்னிடம் கடன் கேட்ட அன்றே கொடுத்தேனா என்றால் 10.03.2021ம் தேதி கடன் கேட்டார். நான் எப்போது கடன் கொடுத்தேன் என்றால் நான் 18.03.2018ம் தேதி கடன் கொடுத்தேன். எவ்வளவு தொகை கடன் கொடுத்தேன் என்றால் ரூ,10,00,000/– கடன் கொடுத்தேன். அந்த கடன் தொகையை பணமாக கொடுத்தேனா அல்லது காசோலையாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாக கொடுத்தேன். அந்த ரொக்க பணத்தை கைவசம் வைத்திருந்தேனா அல்லது வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேனா

என்றால் என் மனைவி 17.01.2021ம் தேதி இறந்துவிட்டார், அவர் இறக்கும்போது அவர் ரூ.7,00,000/- வைத்திருந்தார், அதோடு ரூ,3,00,000/- போட்டு ரூ.10,00,000/- கொடுத்தேன்.

எனக்கு ரூ.10,00,000/- எப்படி வந்தது என்ற விவரத்தை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரி. ரூ.10,00,000/- பணத்தை யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் செல்லப்பன், பெரியசாமி, சந்திரன் ஆகியோர் முன்னிலையில் கொடுத்தேன். மேற்படி 3 நபர்களையும் எனக்கு தெரியாது என்றால் சரி. பணத்தை எங்கே வைத்து கொடுத்தேன் என்றால் என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தேன். பிரதிவாதியின் வீட்டு விலாசம் தெரியுமா என்றால் தெரியும். அவரது வீட்டிற்கு நான் போயிருக்கிறேனா என்றால் போயிருக்கிறேன்.

முன்ஜப்தி மனுவில் காட்டப்பட்டுள்ள பிரதிவாதி கொடுத்த சொத்து எங்கே உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்து என்ன மாதிரியான சொத்து என்றால் சமமான இடமுள்ள சொத்து. பிரதிவாதியின் வீட்டிற்கு அருகில் 4 சிமெண்ட் அட்டை போட்ட வீடுகள் உள்ளது. நான் எப்போது நேரில் பிரதிவாதியிடம் பணம் கேட்டேன் என்றால் 30.03.2023ம் தேதி நான் பிரதிவாதியை நேரில் பார்த்து பணம் கேட்டேன், நான் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று பணம் கேட்டேன்.

ஏற்காட்டை சார்ந்த உள்ள கோவிந்தராஜ் என்பவர் எனக்கு நண்பர் என்றால் இல்லை. அவர் எனக்கு பழக்கமானவர் என்றால் இல்லை, வீடு ஒப்பந்தம் போட்டதால் அவரை எனக்குத் தெரியும். பிரதிவாதியின் ஆவணங்களை கோவிந்தராஜ்தான் கொடுத்தார் என்றால் சரியல்ல, சந்திரன்தான் கொடுத்தார். ஏற்காட்டில் நான் நிறைய நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

பிரதிவாதி என்னை நேரில் பார்த்ததில்லை என்றும் நானும் பிரதிவாதியை நேரில் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை கோவிந்தராஜிடம் ரூ.1,00,000/– பிரதிவாதி கடனுக்காக கொடுத்ததை அந்த கோவிந்தராஜ் என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் கோவிந்தராஜின் பேச்சைக் கேட்டுக்கொண்டு அவரிடம் வாங்கிய ஆவணத்தை சட்டத்திற்கு புறம்பாக பணம் பெற வேண்டும் என்றநோக்கத்தோடு ரூ.10,00,000/– என பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு என்னை தெரியாது, எனக்கும் பிரதிவாதியை தெரியாது என்றும் பொய்யாக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/– S.Sumathy,

Principal District Judge, Salem.